# பரி. பவுல் அஹமதி தமிழ் திருச்சபை

## குவைத்

**நான்
உனக்கு முன்னே போய்,
கோணலானவைகளைச்
செவ்வையாக்குவேன்.**

ஏசாயா 45:2

# செய்திமலர்

ஜனவரி
2026

இதழ் : 09
மலர் : 26

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



## "நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்"

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கிறிஸ்து பிறப்பின் சகல நாட்களையும் அநுசரிக்க தேவன் பாராட்டின தயவுக்காக நன்றி சொல்லுவோம். கர்த்தரின் மேலான கிருபையினால் 2025 –ஆம் ஆண்டு முழுவதும் நம்மை காத்த தேவனுக்கு மறவாமல் நன்றி செலுத்துவோம். நம் ஜீவனை காத்து புது (2026) ஆண்டில் பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

தேவனுக்கு பிரியமானவர்களே! கடந்த ஆண்டு யாருக்கெல்லாம் கசப்பாய் இருந்தது என்று எண்ணுகிறீர்களோ அல்லது யார் யாரெல்லாம் புதிய ஆண்டில் எந்த நன்மைகளை எதிர்பார்த்து காத்திருக்கிறீர்களோ எந்த நிலையிலிருந்தாலும், புதிய ஆண்டு நம் எல்லோருக்கும் கர்த்தரால் பூரண ஆசீரை கொண்டு வருகிற ஆண்டாக இருக்கும் என்பது நிச்சயம். ஏனென்றால் கர்த்தர் நமக்கு நல்ல வாக்குப்பண்ணி இருக்கிறார்.

**"நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்"** (ஏசா. 45:2) என்று நம் தேவன் நமக்கு வாக்கு பண்ணுகிறபடியால் இந்த வாக்குத்தத்தத்தை நாம் உறுதியாய் விசுவாசத்தோடு பற்றிக் கொள்ள வேண்டும். நம் தேவன் நமக்கு முன்னே செல்லுகின்ற பொழுது எத்தகையதான தடையாக காணப்பட்டாலும் ஏசாயா 45:4 சொல்லுகிறதுபோல **"கர்த்தர் வெண்கல கதவுகளை உடைத்து, இருப்புத்தாள்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்கு கொடுப்பேன்"** என்ற வேதத்தின்படி நம்மால் தகர்க்க முடியாத, அசைக்க முடியாத, நீக்க முடியாத தடைகள் போன்று பல காணப்படலாம்.

ஆனால் அவைகள் எத்தகைய தடையாக இருந்தாலும் அவைகளை நம் தேவன் உடைப்பது மட்டுமல்ல: எந்த நன்மையை, எந்த ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரிப்பதற்கு இடையூறாக இருக்கிறதோ அவைகளையே கர்த்தர் நமக்காக தகர்த்து, அதனிடமிருந்தே நமக்கு நன்மைக்கேதுவான பொக்கிஷங்களையும், நமக்கு இதுவரை மறைக்கப்பட்டிருக்கிற ஒளிப்பிடத்தில் உள்ள புதையல்களையும் நமக்கு தர நம் தேவன் வல்லமையும் அதிகாரமும் உள்ள தேவன் மட்டுமல்ல, நமக்கு நன்மையான ஈவுகளை தர நம்மேல் பிரியமுள்ளவருமாய் நம் தேவன் நமக்கு இருக்கிறார்.

நாம் கர்த்தருக்கு பிரியமுள்ளவர்களாய் வாழ்ந்து அவரின் அடிச்சுவடை பற்றிக் கொண்டு அவரை பின் தொடர்ந்து நாம் செல்லுகின்ற நம் வாழ்நாட்கள் வறண்டதாய் இருப்பதில்லை. மிகுந்த செழிப்புடன் புதிய ஆண்டு பூரண ஆசீரையும், சுகத்தையும், நன்மைகளையும், சமாதானத்தையும், மகிழ்வையும்... ... சகலத்தையும் நமக்கு கொண்டுவரும் என்ற விசுவாசத்தோடு புதிய ஆண்டுக்குள் நுழைவோம் கர்த்தர் நம்மை காத்து நடத்துவார். சபையார் யாவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

**சகோ. ஆரோக்கியதாஸ். P**

## என் இயேசு ஒருவரே

கண்ணீர் சிந்திய காலங்களும் !
கவலை கொண்ட இரவுகளும் !
கலங்கி நின்ற பொழுதுகளும் !
ஏளனம் செய்த மனிதர்களும் !
ஏமாற்றம் தந்த உறவுகளும் !
ஏராளம் ஏராளம்...

ஏராளமானோர் இருந்தார்கள்
ஏனோ தூரமாகவே இருந்தார்கள் !
நண்பர்களுக்கு பஞ்சமில்லை !
ஏனோ நம்பிக்கை தர யாருமில்லை !

நாளைய வாழ்வு என்னவாகுமோ
என நினைத்த போதும் !
வாழ்ந்தது போதும் என
நினைத்த போதும் !
வாழ்வை முடித்திட விரைந்த போதும் !

விடியலின் நம்பிக்கை தந்து
விட்டு விடாமல் கூடவே இருந்து
என்னை தூக்கி நிறுத்தியது
என் இயேசு ஒருவரே...

உங்கள் அன்பு சகோதரன்

**ஆண்டனி**

தேவ செய்தி

# The Proof of God's Love

ஏசாயா: 49 : 16 : இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்.

Isaiah 49 : 16 : Behold, I have graven thee upon the palms of my hands.

Isaiah 49:16 is a powerful scripture that speaks of God's deep love and commitment to His people. The verse begins with the word 'Behold,' which calls us to pay attention to what follows. God is saying thet HE has inscribed us on the palms of His hands.

ஏசாயா 49 : 16 என்பது தேவனின் ஆழமான மற்றும் அளவற்ற அன்புதான், தனது மக்களுக்கு உறுதி செய்யும் ஓர் சக்திவாய்ந்த வேதாகம வசனம். இந்த வசனம் "காணுங்கள்" என்ற வார்த்தையுடன் ஆரம்பமாகிறது, இது பின்வரும் வி\யங்களுக்கு நம்மை கவனம் செலுத்தச் சொல்லுகிறது. தேவன் நம்மை கவனம் செலுத்தச் சொல்கிறது. தேவன் நம்மை அவருடைய உள்ளங்கைகளில் எழுத்துருவாக செதுக்கி வைத்துள்ளார் என்று சொல்கிறார்.

தேவன் அன்புமயமான கைகளுடன் செயல்படுகிறார். ஏசாயா 49:16 வசனம் கூறுகிறது, "பாருங்கள், நான் உங்களை என் உள்ளங்கைகளில் எழுத்துருவாக செதுக்கி வைத்துள்ளேன் என்று சொல்கிறார். "பாருங்கள்" என்பது கவனத்தை விரித்து, தேவன் கூறுகிறார் , "நான் உங்களை மறந்துவிட்டேன் என்று நினைத்தால் , என் கைகளைப் பார்க்கவும்". இது ஓர் மனிதன் உலகப்பிரகாரமாக காட்டும் செயலாகும். யோவான் 4:24

கூறுகிறது, “தேவன் ஆவியாயிருக்கிறார் , அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்”.

வேதாகமத்தில் , தேவன் தன்னை தந்தையாக வெளிப்படுத்துகிறார். ஏசாயா 49:15 ஒரு முக்கிய ஆதார வசனமாகும். தேவனின் அன்பு, தாயின் அன்பு போன்றுது எனக் கூறவில்லை. அது தேவனின் அன்பு, தாயின் அன்பை விட மிகப்பெரியது எனக் குறிப்பதாகும். தேவனின் அன்பு ஒரு தாய் அல்லுது தந்தை அன்பை விட அதிகமானது. சங்கீதம் 27:10 ல் கூறுகிறது, “என் தகப்பனும் , என் தாயும் என்னைக் கைவிட்டாலும் , கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்”.

ஏசாயா 49:15 ஒரு மிகப்பெரிய வாக்குறுதியாகும்: “அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை” இது முதலில் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதி. இது இயேசு கிறிஸ்துவின் தேவாலயத்திற்கு சொல்லப்பட்ட ஒரு வாக்குறுதி. மேலும் இது வாக்குறுதியாகும். ஒரு கடவுளை நேசிக்கும் தாய், தமது அன்பை பகிர்வதில் பாரபட்சம் காட்டமாட்டர். ஆனால் பிரச்சனையில், வலியில் அல்லது சிக்கலில் உள்ளவர், அவரின் சிறப்பு கவனத்தை பெறுகிறார். தேவனும் கூட அது மாதிரியே இருக்கிறார். உலகத்தில் நீங்கள் ஒருவன் மட்டுமே என்று நினைத்து, தேவன் உங்களை நேசிக்கிறார். இது தந்தையின் தனிப்பட்ட, நிபந்தனை இல்லாத, மாறாத வாக்குறுதி. “நான் உன்னை மறப்பதில்லை”. புலம்பல் 3 ஆதிகாரம்; 22 – 23 கூறுகிறது, “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.

கர்த்தரின் அன்பின் குறித்த கேள்விக்கு, வசனம் 15ல் பதில் கூறப்பட்டுள்ளது. தம்மை நம்புவர்களை கர்த்தர் மறக்க மாட்டார் “ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை”, கர்த்தர் தமது ஆழமான மற்றும் அளவற்ற அன்பை நிருபிக்கிறார். கர்த்தரின் அன்பு, வசனம் 15ல் விளக்கப்பட்டுள்ளது. கர்த்தரின் அன்பு, வசனம் 16ல் மனித வடிவில் வெளிப்படுகிறது.

ஏசாயா 49:16 எதிர்கால வாக்குதத்தம் அல்ல, ஒரு நிறைவேற்றப்பட்ட உண்மையாகும். நீங்கும் கடவுளின் கை மீது உங்கள் பெயரை எழுதில்லை. தேவன் நம்மை அவருடைய உள்ளங்கைகளில் எழுத்துருவாக செதுக்கி வைத்துள்ளார்.

உங்கள் வாழ்க்கையில் ஆன்மிகமான விஷயங்களை தேவன் கவலையுடன் பார்க்கிறார் , உங்கள் வாழ்க்கையில் உள்ள மற்ற எல்லாவற்றையும் கூட அவர் கவலையுடன் பார்க்கிறார். அவர் விஷயங்களை உள்ளது உள்ளபடி காண்பதில்லை. அவர் அதை பிற்காலத்தில் எப்படியாக இருக்கும் என்பதுபோல காண்கிறார். ஏசாயா 66:13 கூறுகிறது “ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்”. நீங்கள் பாவத்தில் இழந்த நிலையில் இருந்தால் உண்மையான ஆறுதல் பரிசுத்த தேவனில் மட்டுமே காணப்படலாம். நீங்கள் மறக்கப்பட்டுவிட்டதாக உணர்கிறீர்கள் என்றால் உண்மையான ஆழமான மற்றும் அளவற்ற அன்புதனை பரிசுத்த தேவனில் மட்டுமே காணப்படலாம்.

**கர்த்தர் நம்மை அவருடைய சித்தத்தின்படி நடத்துவாராக.**

**கர்த்தர் கிருபையில்**

**சகோ. அசோக்குமார்**

# சகோதரிகள் பகுதி

Praise the Lord

## 1) நினைவில் கொள்ள வேண்டும் :

உபாகமம் 11 : 7, 8 கர்த்தர் செய்த மகத்துவமான கிரியைகளையெல்லாம் உங்கள் கண்கள் அல்லவோ கண்டது. ஆகையால் நீங்கள் பலப்படும்படிக்கும். உபாகமம் 8 : 10-18 ஆனைகயால், நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும், நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக்கட்டி அவைகளில் குடியிருக்கும்போது, உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும் போது, உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவரும், உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும் பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னை சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தர வழியாய் உன்னை அழைத்துவந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவரும், உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்து வந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும் என் சாமர்த்தியமும் என் கைப் பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக. அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறது போல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.

அன்பான சகோதரிகளே இந்த புதிய ஆண்டிலே கர்த்தர் செய்த நன்மைகளை நினைக்க வேண்டும், உணவு, உடை, இருக்க இடம், சுகம், பெலன், ஜீவன் கொடுத்த தேவனை நினைக்க வேண்டும். அவர் செய்த அதிசயம், அற்புதங்களை நினைக்க வேண்டும்.

## 2) விட்டுவிட வேண்டும்:

சங்கீதம் 51 : 2 என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். 51 : 10 தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்று சங்கீதகாரனாகிய தாவீது சொல்வது போல நாமும் நம்முடைய அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும், சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்று கேட்போம்.

1.தெசலோனிக்கேயர் 5 :22 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள். உபாகமம் 10 : 16 ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள். வெளியரங்கமாய் செய்கிற காரியம் இல்லை. இருதயத்தை சுத்தப்படுத்த வேண்டும். எரேமியா 4 : 4 யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம், என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள். ரோமர் 2 : 29 உள்ளத்திலே யூதனானவனே யூதன், எழுத்தின்படி உண்டாகாமல் ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம், இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது. கர்த்தரோடு நடக்க கூடாதபடி தடை செய்கிற எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும்

## 3) வார்த்தையை நம்ப வேண்டும்:

எபிரேயர் 10 : 23 அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. நம்முடைய தேவன் நேற்றும், இன்றும், என்றும் மாறாத தேவன். மத்தேயு 6 : 25 ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? பிலிப்பியர் 4 : 19 என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து தேவனிடத்தில் தெரியப்படுத்துவோம்.

1) கர்த்தர் செய்த நன்மைகள், அதிசயம் அற்புதம் எல்லாவற்றையும் நினைவுக் கூறுவோம்.

2) பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும்.

3) கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தையை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும்.

கர்த்தர் தாமே இந்த வார்த்தையை ஆசீர்வதிப்பாராக.

HAPPY NEW YEAR TO ALL

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரி,
டெய்சி எபிநேசர்

# கோணலானவைகளைச் செவ்வையாக்கும் தேவன்

புதிய வருடத்தில் நெய்யாய் பொழிந்திட!
அவர் தாமே நம்முன்னே சென்று
கோணலானவைகளைச் செவ்வையாக்குகின்றாரே!
வழி திறக்கும் அதிசயம் நடந்திடுமே!
செங்கடலையும் நாம் தாண்டிடுவோமே!
காரிருளில் பேரொளி வீசிடுமே!
இவ்வனாந்திரப் பாதையில் நம் நேசரின் கரமே
நம்மை நிச்சயம் நடத்திடுமே!
வாக்கு அளித்தவர் உண்மையுள்ளவரே!
தடைகள் யாவையும், அவர் பலத்தோடு தாண்டிடுவோமே!
தோல்விகளை நாம் ஜெயித்திடுவோமே!
எனக்குக் குறித்திருக்கிறதை
அவர் நிறைவேற்றும் நாட்கள் மிக சமீபமே!
ஜெய கிறிஸ்து நம் முன்னே சென்று
நமக்காக யுத்தம் செய்ய அவர் வல்லவரே!
ஜெயக் கொடியை நாம் பெற்றிடுவோமே!
கரடானவைகள் சமமாகும் சகலத்தையும் அவர்
நமக்கு புதிதாக்கி நம் காரியங்கள் அனைத்தையும்
கட்டி நொறுங்குண்ட இதயத்தை அவர்
தேற்றுகின்றாரே! நம் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட
ஒரு நாளும் நம்மை விடாமல், தப்பிச் செல்லும்
வழியையும் நமக்கு கட்டளையிட்டு
புதிய கிருபைகள் அனைத்தையும் தந்து
ஜெயமுடன் நம்மை வாழச் செய்திடுவாரே!
கனமும், மகிமையும், துதியும் உமக்கே!

- நன்றியப்பா!

(A. பியூலா மெர்சிபால்)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி-12:2 )

சகோதரி. ஜெனிஷா ஜான் கெஸ்டன்
சகோ.ஜெகன்
செல்வன்.மிகாயேல் சத்தீஷ்
செல்வன்.ஆல்வின் டேவிட் மணிராஜ்
சகோ.சகாய டார்வின்
செல்வி.ரேச்சல் ஜாய்லன் சாமுவேல்
செல்வி.ஷாரோன் ஜெனிபர்
சகோ.யேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ. R.நக்கீரன்
செல்வன்.ஜெய்ரஸ் பால்
செல்வி.ஷாமி ஷர்மன் ராஜ்
சகோதரி.ஆஷாதேவி பிரெட்சிலின்
செல்வன்.கோகுல்நாத் கோபு
சகோதரி.ஏஞ்சல் கிறிஸ்டினா
செல்வன்.ஜோஷன் ஜீவா ஜீவல்சிங்
சகோதரி.ஜெனட் யேசுதாஸ்
சகோ.சுபின் சிங்
செல்வன்.அர்யான் சிங்

செல்வி.சுனிதா சுந்தர்ராஜ்
செல்வன்.ஜான் லெவின் ஜான் கெஸ்டன்
சகோ.ஆரோக்கியராஜ்
சகோ.ஸ்ரீநிவாசன்
சகோ.செங்குட்டுவன்
சகோதரி.ஜோன் ஆர்க் அசோக்குமார்
சகோதரி.மஞ்சுளா பாலமுருகன்
செல்வி.ஷெரின் பெனிட்டா ஸ்டாலின்
சகோதரி.விக்டோரியா ராஜன்
செல்வி.சாரா ஆல்வின்
செல்வன்.சாமுவேல் ஆல்வின்
செல்வி.அக்சாள் நிசி எபெனேசர்
சகோ.செகுன் ஸ்ரீநிவாசன்
சகோதரி.எப்சிபா ஸ்டீபன்
செல்வி.ஹன்னா கிரேஸ்லின்
சகோதரி.அபிகாயில் கிரேஸ் ஜஸ்டின்
சகோதரி.பிரிசில்லா செங்குட்டுவன்
சகோதரி. அபியா சுனல் சுந்தர்ராஜ்

**பிறந்த நாட்கள் மற்றும் திருமண நாட்களை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்.**

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி-திரு சாம் ஆனந் – எப்சிபா பாமா
திருமதி-திரு சகாய டார்வின்– இவாஞ்சலின்
திருமதி-திரு E.சாமுவேல் – எமிமாள்
திருமதி-திரு.மணிராஜ் – ஏஞ்சலினா
திருமதி-திரு.வின்சென்ட் ஸ்வீட் – கீதா சகாயமேரி
திருமதி-திரு. ஜெஸ்சன் ஆல்பஸ் ஜேம்ஸ்– அனுஷா

திருமதி-திரு இயேசுரத்தினம் – மெர்சில்ன் தயா
திருமதி-திரு.ஷர்மன் ராஜ் – ரீனா ரேச்சல்
திருமதி-திரு. தினேஷ் குமார் – அஸ்வினி
திருமதி-திரு கனீஷ் ஜோஸ்வா அமலன் – ஜோஸ்வா
திருமதி-திரு வேளாங்கன்னி – ரீனா

# 2026 – ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/01/2026 | சகோதரி. டெய்சி எபினேசர் | சகோதரி. எப்சி சாம் ஆனந்த் |
| 11/01/2026 | சகோ. பக்தராஜ் | சகோ. ஜான்சன் |
| 18/01/2026 | சகோதரி. ஷீபா பிரசாத் | சகோதரி. பிரிசில்லா ஆமோஸ் |
| 25/01/2026 | சகோ. தாமஸ் | சகோ. கிறிஸ்டோபர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/01/2026 | சகோ. தாஸ் கருணா | சகோ. பிராங்க்ளின் |
| 09/01/2026 | சகோ. இயேசுரத்தினம் | சகோ. ஆண்டனி |
| 16/01/2026 | Holy Communion Service | |
| 23/01/2026 | சகோ. V. எபிநேசர் | சகோ. ஜெகநாதன் |
| 30/01/2026 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. டேனியேல் மனோஜ் |

## ஆராதனை ஒழுங்குகள்

**சங்கிலி தொடர் ஜெபம்**

01/1/2026 மாலை 6:00 முதல் 02/1/2025 காலை 6:00 வரை

**8/1/2026 – அன்று முழு இரவு ஜெப ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**10/1/2026 – சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – எஸ்றா

**30/1/2026 – வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – I சாமுவேல் மற்றும் சங்கீதம் 1 – 10

**சனிக்கிழமை**

சிறுவர் வேதாகம பள்ளி

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 3:30 முதல் 5:30 ரை

**திங்கட்கிழமை**

பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

**செவ்வாய்கிழமை**

குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை

இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**

பாடல் பயிற்சி கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!



**கீழக் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. மோசே எவைகளுக்கு பயந்தான்?
2. கர்த்தரிடமிருந்து உடனடி அழிவுப் பதில் யாருக்கு கிடைக்கும்?
3. முதலில் எகிப்துக்கு போனவர்கள் எத்தனை பேர் ?
4. விடுதலை வேண்டாம் என்பவனுக்கு செய்ய வேண்டிய விதம் என்ன?
5. தீர்க்கத்தரிசி சொன்னது நடக்கவில்லை என்றால், அது எதினால் சொல்லப்பட்டது?
6. இஸ்ரவேலர் எவர்களின் சமாதானத்தை தேடக்கூடாது?
7. லேவியரின் வாக்குக்கு, ஜனங்கள் சொல்ல வேண்டிய மறுமொழி என்ன?
8. கர்த்தர் எவைகளை விருத்தசேதனம் பண்ணுவார் ?
9. கொழுத்த போது தேவனை விட்டு விட்டவன் யார் ?
10. எப்படிப்பட்ட மரங்களை வெட்ட வேண்டும் ?
11. கர்த்தருக்கு விரோதமாய் துரோகப் பேச்சு பேசியவர்கள் யார் ?
12. வாழ்நாட்கள் நீடிக்க, இஸ்ரவேலரிடம் இருக்க வேண்டியவை எவை?
13. யோர்தானை கடந்து போக, விண்ணப்பம் மறுக்கப்பட்டது யாருக்கு?
14. 3–ம், 4–ம் தலைமுறை வரையிலும் விசாரணை – யாரைக் குறித்து?
15. எதற்கு பயப்படாமல், நியாயம் செய்ய வேண்டும் ?

விடைகளை வருகின்ற 20-01-2026 க்குள்
(WhatsApp #+91 7305651625) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**“ உபாகமம் ”**

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

## 2025 – டிசம்பர் மாத வேத வினாவுக்கு விடைகள்

1. நஷ்டத்தோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாக (லேவி 5:6)
2. பழுதற்ற ஒரு ஆட்டுகடாவை (லேவி 5:18)
3. புளித்தமாவுள்ளதாக (லேவி 6:17)
4. பாவ நிவாரண பலி (லேவி 6:28)
5. அசைவாட்டும் மார்கண்டம் ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடை (லேவி 7:34)
6. பரிசுத்த ஸ்தலம், ஆசாரிப்பு கூடாரம், பலிபீடம்( லேவி 16:20)
7. அவள் சகோதரியை (லேவி 18:18)
8. சிந்திகிடக்கிறதை (லேவி 19:9)
9. நியாய விசாரணையில் (லேவி 19:15)
10. பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் (லேவி 25:34)
11. மரச்சாமான் (லேவி 15:12)
12. ஏழுநாள் (லேவி 15:13)
13. தோல், மாமிசம் முழுவதும், தலை, தொடைகள், குடல்கள், சாணி, காளை முழுவதும். (லேவி 4:11,12)
14. பரிசுத்த ஸ்தலம், ஆசாரிப்பு கூடாரம், பலிபீடம்( லேவி 16:20)
15. கர்த்தருடைய சன்னிதியில் (லேவி 17:5)

## 2025– டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி
Sis. ஜான்சி ராணி
Sis. பியூலா மெர்சி பால்
Sis. ஆனி சைமன்
Sis. சாந்தி
Sis. நித்யா ஜோன்ஸ்
Sis. மெர்சலின் தயா
Sis. கஸ்தூரி
Sis. சிநேகா

Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. சுபா ஸ்டீபன்
Sis. நீஜா
Sis. அனிதா ஆரோக்கியதாஸ்
Sis. மரிய குளோரி தாஸ்
Sis. பத்மினி
Bro. பால்ராஜ் சேகரன்

## வாலிபர் பகுதி

GLORY TO JESUS

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். இந்த புதிய வருடத்திலும் நம் அநேக தீர்மானங்களை எடுத்து நிறைவேற்ற அற்பணித்திருப்போம். அப்படி தீர்மானங்களை நிறைவேற்ற பிரயாசப்படும் போது தேவன் நமக்கு உதவி செய்வாராக.

தானியேல் 6 : 28– தரியுவின் ராஜ்யபார காலத்திலும் பெர்சியனாகிய கோரேசுனுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. தானியேலின் காரியம் எல்லா காலத்திலும் ஜெயமாயிருந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அந்த ஜெயத்தை கொடுத்தார். ஏன் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது என்றால், கர்த்தர் அவனோடிருந்ததினால்.

நீதிமொழிகள் 22 : 31 ல் வாசிக்கிறது போல குதிரை யுத்த நாளுக்கு ஆயத்த மாக்கப்படும் ஜெயமோ கர்த்தரால் வரும்.
தானியேலுடைய வாழ்க்கை தேவனுடைய பார்வையில் மிகவும் பிரியமாய் இருந்தது (தானியேல் 9 : 23) தானியேல் எல்லா சூழ்நிலையிலும் தேவனை தனக்கு முன்பாக வைத்து வாழ்ந்தார். அடிமையாக கொண்டு போகப்பட்ட தேசத்திலும் உண்மையாய் இருந்தார். தானியேல் 1:8 ல் தேவன் விரும்பும் பரிசுத்தத்தில் வாழ தானியேல் தீர்மானம் செய்திருந்தார். அந்நாட்டு ராஜபோஜனத்தினால் தீட்டுப்படாதப்படிக்கு தன்னை காத்து கொண்டார். தேவன் அந்த தீர்மானத்தை அங்கிகரித்து ராஜ்யம் எங்குமுள்ள எல்லாரைப் பார்க்கிலும் பத்து மடங்கு சமர்த்தராகக் காணப்படும்படிக்கு தேவன் அவனை ஆசிர்வதித்தார். அதுமாத்திரமல்ல 2-ஆம் அதிகாரத்தில், ராஜா கண்ட சொப்பனத்திற்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று ஞானிகள், ஜோசியர், சாஸ்திரிகள் எல்லாரும் உயிருக்கு பயந்து நடுங்கிகொண்டிருந்தார்கள், யாருடைய கண்களிலாவது இரக்கம் கிடைக்காதா என்று ஏங்கி கொண்டிருந்தார்கள். தானியேலோ வென்றால் 2 :17 தன் வீட்டுக்கு போய் தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடே அழியாதபடிக்கு இந்த மறைபொருளை குறித்து பரலோகத்தின் தேவனிடம் விளக்கம் கேட்டார் என்று பார்க்கிறோம். எவ்வளவு பெரிய நெருக்கமான சூழ்நிலையிலும் தேவனுடைய இரக்கத்திற்காக தேவனை நோக்கி பார்க்கும் அனுபவத்தை உடையவராய்

இருந்தார். அவருடைய முகத்தை நோக்கி பார்க்கும் முகம் ஒரு நாளும் வெட்கப்படாது. தேவன் சொப்பனத்தை வெளிப்படுத்தி தானியேலை உயர்த்தினார். தானியேல் 6 ஆம் அதிகாரத்தில் பிரதானிகள் தேசாதிபதிகள் எப்படியாவது தானியேலை குற்றபடுத்தி அழிக்க எண்ணினர்கள். ஆனால் 6:4 ல் அவர்களால் யாதொரு குற்றத்தையும் காணப்படாதபடிக்கு தானியேலுடைய வாழ்க்கை உண்மையும் உத்தமுமாய் இருந்தது. அதுமாத்திரமல்ல தேவனை தொழுதுகொள்ளுவதற்கு சட்டம் எவ்வளவு எதிராய் இருந்தாலும், வழக்கத்தின்படியே முன்றுவேளையும் ஜெபித்தார் என்று பார்க்கிறோம். இதற்காக சீங்க கெபியில் போடப்படுகிறார். தேவன் அவைகளின் வாய்களை தம்முடைய துதனை கொண்டு கட்டிப்போட்டார். ஆனால் குற்றம் சாட்டினவர்களையோ சிங்கங்கள் கொன்று போட்டது என்று பார்க்கிறோம்.

இந்த 2026 ஆம் ஆண்டிலும் தேவன் நம்முடைய காரியங்களை ஜெயமாக முடிய பண்ணவேண்டுவோமாக. எடுத்த தீர்மானத்தில் உறுதியாய் இருப்போம், எந்த சூழ்நிலையாய் இருந்தாலும் அவருடைய முகத்தை நோக்கி பார்ப்போம், எங்கே இருந்தாலும் உண்மையோடும், உத்தமத்தோடும் இருப்போம். நிச்சயம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஜெயத்தை தந்து நடத்துவார்.

**கிறிஸ்துவின் பணியில்**

**ATC Youth Team**

Be an Example : I Timothy 4:12

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை,

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் பிராங்ளின் அவர்களிடத்திலும்,
இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. தாஸ் கருணா அவர்களிடத்திலும்,
போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. கிரண் அவர்களிடத்திலும்,
ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று சகோ. சாம் ஆனந் அவர்களிடத்திலும்,

தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

## நம் நற்செய்தியின் தளங்கள் எங்கே?

"சீயோன் என்னும் சமவெளி, உயர்ந்த பர்வதம் என்னும் மலைப்பகுதி எருசலேம் போன்ற பட்டணங்கள்"(ஏசாயா 40-9)

நாட்டுபுற ஊழியம், மலைபுற ஊழியம், நகர்புற ஊழியம், என்று உலகம் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கபட வேண்டும் என்று ஏசாயா விரும்புகிறார்.

## நற்செய்தியை எப்படி சொல்ல வேண்டும்?

### 1. உரத்த சத்தமிட்டு சொல்லு

எபி 10:23- அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. நாமும் உரக்க சத்தமிட்டுக் அறிக்கையிட வேண்டும்.

### 2. பயப்படாமல் சத்தமிட்டு சொல்லு

வெளி 15:4- கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின. நாமும். அவர் நாமத்தை மகிமை படுத்த பயப்படகூடாது.

### 3. இதோ உன் தேவன் என்று சத்தமிட்டு சொல்லு

வெளி 7:10- அவர்கள் மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

**இலவசமாய் பெற்றுக்கொண்ட நன்மைகளை இலவசமாய் கொடுங்கள்.**

| Father | Mother |
|---|---|
| F. Family of Pillar- குடும்பத்தின் தூண் | M. Motivation – ஊக்கபடுத்துவது |
| A. Armor of Family- குடும்பத்தின் பாதுகாப்பு | O. Observation- கண்ணோக்கமாயிருப்பது |
| T. Teacher of Life- வாழ்க்கையின் ஆசிரியர் | T. Tender Loving Care- அளவில்லாத அன்பு |
| H. Hero of Children- பிள்ளைகளின் Hero. | H. Honest – உண்மை – நேர்மை |
| E. Expertness- எதிர்பார்ப்பு இல்லாமல் இருப்பது. | E. Efficient – ஏற்புடையதாய் இருப்பது. |
| R. Responsible- அக்கரையுடன் இருப்பது. | R. Responsible – அக்கரையுடன் இருப்பது. |

# Kids Corner

## ANSWERS FOR THE MONTH OF DECEMBER MATHEW CHAPTER 1 - 14

1) What comes out of the heart (Mathew 15:18)
2) The sign of Jonah (16:4)
3) Moses and Elijah (17:3)
4) Seventy times seven (18:22)
5) Sell your possessions and follow me (19:21)
6) The one who serves others (20:26)
7) A donkey (21:5)
8) Love God (22 : 37-38)
9) Hypocrities (23:13)
10) Wars , famines , earthquakes (24 : 6-7)
11) Be ready for Jesus (25 : 1-13)
12) Judas Iscariot (26 : 14 – 16)
13) Not my will; but yours be done (26 : 39)
14) Pontius pilate ( 27 : 24)
15) The temple viel tore (27 : 5)

## CHILDREN'S WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF DECEMBER

1) Andrea Magdalene
2) Adriel Kamuel dhas
3) Abel Raj
4) Ebisha Joanne
5) Solomon Immanuel
6) Affiya Arokiya Dhas



## JANUARY MONTH QUIZ FOR CHILDREN



1. Who was the king of Persia in the book of Esther?
2. Who disobeyed the King by not coming when he called?
3. How did the king decide who his new wife should be?
4. What was esthers's nationality?
5. What did bigthan and teresh try to do?
6. Why did Haman want to kill the entire Jewish nation?
7. What day was set for the extermination of the Jesus?
8. What did mordecai do when he heard about haman's plan to kill the jews?
9. How long did Esther fast before going to see the king?
10. What did the king hold out to Esther to show she could approach him?
11. What is the name of Haman's wife?
12. What did the king do when he couldn't sleep?
13. How did the king reward Mordecai from saving him from an assosination attempt?
14. Who did queen Esther invite to her banquet?
15. How many banquets did queen Esther hold?
16. How did Haman die?
17. How did the king stop the extermination of jews?
18. What colour was Mordecai royal apparel?
19. How many sons did Haman have?
20. What festival was instituted to celebrate the fact that the jews were saved?

**Kids Find the answer from the Book of**

**ESTHER**

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில











# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்



முதன்மை ஊழியர்
**Bro. ஆரோக்கியதாஸ்**
Ph. 9987 0126



பொருளாளர்
**Bro. ஜான்சன்**
Ph.97610275



செயலாளர்
**Bro. தாமஸ்**
Ph.66810423





பெண்கள் ஐக்கிய தலைவி
**Sis. டெய்சி எபிநேசர்**
Ph.60686612



வாலிப ஐக்கிய தலைவர்
**Bro. M. கிறிஸ்டோபர்**
Ph.67096449

**Church Postal Address**
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait.

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

Private Circulation Only